கல்லணை கால்வாயின் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் (ERM - GACS)

<u>மீள்குடியேற்ற திட்ட செயலாக்க அறிக்கை</u>

கல்லணை கால்வாய் அமைப்பு (GACS) கல்லணை பிரதான கால்வாயை உள்ளடக்கியது. இந்த பிரதான கால்வாய் 148.65 கி.மீ நீளம் மற்றும் கிளை வாய்க்கால்கள் மொத்தம் 1232 கி.மீ நீளம் கொண்டது. இதில் பக்கவாட்டு வாய்க்கால்களும் (Laterals) அடங்கும். கல்லணை பிரதான கால்வாய் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள மூன்று மாவட்டங்களான திருச்சிராப்பள்ளி (5 கி.மீ) தஞ்சாவூர் (104.00 கி.மீ) மற்றும் புதுக்கோட்டை (39.65 கி.மீ) வழியாக செல்கிறது. தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை இந்த பழமையான கல்லணை கால்வாயினை சரிசெய்து அதன் பழுதடைந்த தன்மைக்கேற்ப மறுகட்டுமானம், புனரமைப்பு, பழுது நீக்குதல் மற்றும் புதிய கட்டுமானங்கள் ஆகிய உட்கூறுகளை கண்டறிந்து சமமான நீர்பங்கீட்டினை கடைமடை வரை கொண்டு செல்லவும், பாசன கட்டமைப்புகள் பராமரிக்கவும் விரிவான திட்ட அறிக்கை, இந்திய அரசாங்கத்தின் ஜல் சக்தி துறையின் கீழ் இயங்கும் WAPCOS நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கல்லணை கால்வாய் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் (ERM) திட்ட பணிகள் தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை (WRD) மூலம் செயல்படுத்தப்படும். இது தொடர்பாக, இந்திய அரசின் நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை (DEA) மூலம் தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை (WRD) கல்லணை கால்வாயின் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீன மயமாக்கல் பணிகளுக்கு பகுதி நிதிக்காக ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியை (AIIB) அணுகி உள்ளது. தற்பொழுது 2020-21 விலை பட்டியல் படி இந்திய ரூபாய் மதிப்பில் 2639.15 கோடி (377.02 மில்லியன் USD) திட்ட மதிப்பில் இந்திய ரூபாயில் 70% தொகையான 1609.125 கோடி (229.87 மில்லியன் USD) கடனாக வழங்குமாறு (AIIB) ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடம் இந்திய அரசின் (DEA) பொருளாதார விவகாரங்கள் துறை அணுகி உள்ளது. மீதமுள்ள 30% சதவிகித தொகையான இந்திய ரூபாய் 689.625 கோடிகள் (98.52 மில்லியன் USD) தமிழ்நாடு அரசின் பங்காக இருக்கும்.

இதில் மீள்குடியேற்ற திட்டமிடல் கட்டமைப்பு (RPF) , தேசிய சட்டங்கள், மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) யின் சுற்றுசூழல் மற்றும் சமூக கட்டமைப்பின் (ESF) 2019 ஆகியவற்றிற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படக்கூடிய பாதகமான சமூக தாக்கங்களை குறைக்கவும் மற்றும் தவிர்க்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதை சரிபார்க்கக்கூடிய வழிவகைகளை ஆராய்ந்து இழப்புகளை குறைக்கவும் மற்றும் தவிர்க்கவும், அதன் தொடர்புடைய உரிமைகளின் நோக்கத்தையும் நிறைவேற்றும் பொருட்டு தேசிய, மாநில மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) கொள்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பாதிப்பு காலம் மற்றும் அதன் தன்மைகேற்றவாறு இழப்பீடு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்துகின்றபொழுது குடியிருப்பு மனை, வணிக மையங்கள் மற்றும் பிற சொத்துக்களுக்கு தமிழகஅரசின் நிலம் கையகப்படுத்துதல், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம் (RFTCTLARR Act) 2013-ன் படி இழப்பீடு வழங்கப்படும். திட்டத்தால் பாதிக்கப்பட்ட நலிவுற்ற பெண்கள் தலைமையேற்றுள்ள குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர், பட்டியல் இனத்தவர்கள், முதியோர்கள், திருநங்கைகள், ஆதாரவற்ற குழந்தைகள் மற்றும் குழந்தை தொழிளாளர்கள் உள்ள குடும்பங்கள், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள விவசாயிகள், பட்டியல் இனத்தைச் சார்ந்த விவசாய தொழிலாளர்கள், நிலமற்ற தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடு பெறுவதை திட்டம் உறுதிசெய்யும். இத்திட்டத்தை செயல்படுத்துவதின் மூலம் பாதிக்கப்படும் குடும்பங்கள் இடம் பெயர்வதற்கு முன்னர் அனைத்து இழப்பீடுகளும், உதவிகளும் வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மீள்குடியேற்றம் இத்திட்டத்தின் திட்ட இயக்குநர் மூலம் செயல்படுத்தபடும். நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மீள்குடியேற்றத்தை திட்ட இயக்குநர் மற்றும் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் இணைந்து செயல்படுத்துவார்கள்.

நிலம் கையகபடுத்துதல் மற்றும் மீள்குடியேற்றப் பணிகளில் துறை சார்ந்த  வல்லுநர்கள், தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை அவர்களுக்கு துணை புரிவார்கள். புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற பிரிவு இதே போன்ற அபிவிருத்தித் திட்டங்களில் அனுபவமுள்ள ஒரு அரசு சாரா தொண்டு (NGO) நிறுவனம் மூலம் செயல்படுத்த வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தில் குறைதீர்க்கும் குழு (GRC) மூன்று நிலைகளாக அமைக்கப்பட்டுள்ளது. முதல்நிலை, உதவி பொறியாளர் (PIU) திட்ட செயலாக்க அலகு, மற்றும் உதவி செயற்பொறியாளர் (PIU) திட்ட செயலாக்க அலகு ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த முதல் நிலை அலுவலர்கள் திட்ட அமலகாக்கப்படும்பொழுது எழும் இடர்பாடுகளை தவிர்க்கவும், கட்டுமான சம்பந்தபட்ட இடர்பாடுகளை  களையவும், பாசன நீர்மேலாண்மையில் ஏற்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்ய பாடுபடும். மேல்முறையீட்டிற்காக  2-ஆம் நிலை, செயற்பொறியாளர் (PIU) திட்ட செயலாக்க அலகு தலைமையில் இயங்கும். 3-ஆம் நிலை, கண்காணிப்பு பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் (PMU) திட்ட மேலாண்மை அலகு ஆகியோரின் தலைமையில் செயல்படும். (GRM) குறைதீர்க்கும் பொறிமுறை இருந்த போதிலும் பாதிக்கப்பட்ட நபர் எந்த நிலையினும் நாட்டின் சட்ட அமைப்பை அணுக முடியும். நிறுவப்பட்ட (GRM) குறைதீர்க்கும் பொறிமுறை இருந்த போதிலும் சிக்கலை தீர்க்கும் நிலையில் இல்லை என்றால் பாதிக்கப்பட்ட நபர்கள் (AIIB) ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி தலைமைகத்தில் உள்ள புகார் பெறும் அதிகாரியை நேரிடையாக எழுத்துவடிவில் தொடர்பு கொள்வதின் மூலம் மற்றும் (AIIB) ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பொறிமுறையையும் (PPM) பயன்படுத்தலாம்.

மீள்குடியேற்ற திட்டமிடல் கட்டமைப்பிற்கு அனுமதி கிடைத்தவுடன் பாதிக்கப்பட்ட நபர்கள் திட்ட பகுதியில் உள்ள சமூகங்கள் மற்றும் பொது சமூகத்துடன் ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு மேற்கொள்ளபடும். இத்திட்டத்தை செயல்படுத்தும் போது அனைத்து பிரதான கால்வாய் மற்றும் பகிர்மான கால்வாய் பகுதி முழுமையும் ஆலோசனை நடத்தப்படும். திட்ட செயலாக்கப்பிரிவு (PIU) மற்றும் செயல்படுத்தல் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனம் (NGO) ஆகியவை ஆலோசனை நடத்த பொறுப்பாகும். எடுக்கப்படும் முடிவுகள் செயல்முறையின் விளைவுகளை பற்றி ஆலோசிக்கப்பட்ட குழுக்களுக்கும் மற்றும் தனிநபர்களுக்கும் தெரிவிக்கப்படுவதை (PIU) திட்ட செயலாக்க அலகு உறுதி செய்யும். மேலும் மேற்கூறிய கருத்துக்கள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் உறுதிபடுத்தும். இத்திட்டத்திற்காக நிறுவப்பட்ட ஆலோசனை செயல்முறை, முறையான மற்றும் முறைசாரா ஆலோசனை முறைகளை பயன்படுத்தும்.

விரிவான நேர்காணல்கள் பொது கூட்டங்கள், மற்றும் குழு விவாதங்கள் போன்ற பல்வேறு நுட்பங்களை திட்ட அமலாக்கத்தின் போது பங்குதாரர்களுடன் கலந்தாலோசிப்பதற்கு பரிந்துரைக்கப்படும். இந்த (RPF) மீள்குடியேற்ற திட்ட கட்டமைப்பு பொது ஆலோசனை, பிராந்திய மொழியான தமிழ்மொழியில் நாளிதழ் மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் எல்லோருக்கும் தெரியப்படுத்தப்படும். மேலும் இதன் சுருக்கம் மற்றும் மீள்குடியேற்ற திட்டம் (RPF) / சுற்றுப்புறசூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை (ESIA) நகல்களும் கீழ்கண்ட அலுவலகங்களில் பெற்றுகொள்ளலாம்.

1. திட்ட செயலாக்க அலுவலகம் (PIU)
2. ஆணையர், மாநகராட்சி அலுவலகம்
3. உள்ளுர் அளவிலான அலுவலகங்கள்

இத்திட்டத்தை பற்றிய வெளியிட்டு அறிக்கை, நாள் மற்றும் இருப்பிடம் பற்றிய விவரங்கள் ஆசிய உள்கட்டமைப்பு மூதலீட்டு வங்கி (AIIB) வசம் பகிரப்படும்.

மீள்குடியேற்ற திட்ட கட்டமைப்பு (RPF) மற்றும் மீள்குடியேற்ற திட்டம் (RP) / சுற்றுப்புறச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கை (ESIA) ஆகியவை நீர்வளத்துறை (WRD) மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு மூதலீட்டு வங்கியால் (AIIB), மீள்குடியேற்ற திட்ட கட்டமைப்பு (RPF) / மீள்குடியேற்ற திட்டம் (RP) / சுற்றுப்புறசூழல் மற்றும் சமூகதாக்க மதிப்பீட்டு அறிக்கையின் (ESIA) ஒப்புதலுக்கு பிறகு நீர்வளத்துறையின் (WRD) அதிகாரபூர்வ வலைதளத்திலும், ஆசிய உள்கட்டமைப்பு மூதலீட்டு வங்கியின் (AIIB) அதிகாரபூர்வ வலைதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும்.